# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075217

C

1. District மாவட்டம் : Salem | PS: காவல்நிலையம் V & AC, | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 1/AC/2021 | Date: நாள் 11.01.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7 (a) and (b)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: —

(iii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 11.01.2021 | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் before 13.00 hrs. | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.01.2021 | Time நேரம் : 15.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.01.2021 | Time நேரம் : 15.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Credible information

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 7 km South.

Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி Regional Transport office, Salem South, Mallakka Nagar, Amanikondalampatty, Salem.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Chandramouli | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Sundaram (Late)

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Additional Supdt. of police | (g) Address : முகவரி Vigilance and Anti Corruption, Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. Saravanabhavan, Regional Transport officer, Salem South Amanikondalampatty, Salem.
2) Tr. Rajamani, Motor Vehicle Inspector Grade-1, O/o the Regional Transport officer, Salem South, Amani kondalampatti and
3) Tr. Muruganvel, S/o Sendrayan. 4) Tr. Nagarajan S/o P. Chellappan
5) Tr. Dharani Kumar S/o Perumal.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

2021 09 29 17:02

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

A Separate Sheet is herewith annexed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

11/1/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11.01.2021 15.30hrs.

Name: பெயர் S. Chandramouli,
Rank: நிலை ......................No. எண் ..........
Additional Supdt. of Police, Vigilance and Anti Corruption, Salem.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

இன்று 11.01.2021 ஆம் தேதி மதியம் சுமார் 13.00 மணியளவில் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.S. சந்திரமௌலி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கிடைத்த ரகசிய தகவல் பின்வருமாறு.

சேலம் மாவட்டம், சேலம் மாநகரம் அமானி கொண்டலாம்பட்டி மல்லாக்கா நகரில் இயங்கிவரும் சேலம் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலக வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.என்.சரவணபவன் மற்றும் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – I ஆக பணிபுரியும் திரு.அ.இராஜாமணி ஆகியோர் தங்களது பதவிகளை தவறாகப் பயன்படுத்தி அங்குள்ள தனிநபர் புரோக்கர்கள் திரு.முருகவேல், திரு.நாகராஜன், திரு.தரணிகுமார் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை ஒட்டி வெளியில் RTO அலுவலகப் பணிகளுக்கு ஆன்லைன் சர்வீசஸ் செய்து வரும் நபர்கள் மூலம் சேலம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து புதிய வாகனப் பதிவு, தற்காலிக வாகனப்பதிவு, பழைய வாகன பதிவு புதுப்பித்தல், தகுதிச் சான்று புதுப்பித்தல், தற்காலிக ஓட்டுநர் உரிமம் வழங்குதல், புதிய ஓட்டுநர் உரிமம் வழங்குதல், உரிமம் மேற்குறிப்பு வழங்குதல், பொதுப்பணி வில்லை வழங்குதல் ஆகியவற்றிற்காக வரும் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு வசூலிப்பதாகவும், மேற்படி புரோக்கர்கள் அலுவலக பதிவேடுகளை கையாண்டு மேற்படி தொகைகளை வசூலித்து வருவதாகவும் ரகசிய தகவல் கிடைத்தது. மேற்படி தகவலின் பேரில் சேலம் அமானி கொண்டலாம்பட்டி மல்லாக்கா நகரில் இயங்கிவரும் சேலம் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தினை இன்று மாலை சுமார் 14.30 மணியளவில் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் செல்வி பி.தங்கமணி, அரசு சாட்சிகள் திரு.K. வைத்திலிங்கம் துணை வட்டாட்சியர் (தேர்தல்) சேலம் தெற்கு வட்டம், திரு.S.மதியழகன், வருவாய் ஆய்வாளர், வேம்படிதாளம் பிர்கா, சேலம் தெற்கு வட்டம் மற்றும் குழுவினருடன் சேலம் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி திடீர் சோதனையின்போது மேற்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் இருந்த தனிநபர் புரோக்கர்கள் திரு.முருகவேல், திரு.நாகராஜன், திரு.தரணிகுமார் ஆகியோர்களிடம் கணக்கில் வராத தொகைகள் முறையே ரூ.12,000/–, ரூ.8,000/– மற்றும் ரூ.2,000/– இருந்தது தெரியவந்தது. மேலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வடக்கு பக்கமாக உள்ள கம்ப்யூட்டர் அறையினை ஒட்டி வடக்கு பக்கமாக உள்ள கதவின் வழியாக வெளியே சென்று இடது பக்கமாக திரும்பி wash basin செல்லும் வழியில் வலது பக்கமாக உள்ள மாடிப்படிகளுக்கு கீழ் ரூ.1,500/– கேட்பாரற்று கிடந்தது.

எனவே வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.என்.சரவணபவன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அ.இராஜாமணி மற்றும் தனிநபர் புரோக்கர்கள் திரு.முருகவேல், திரு.நாகராஜன், திரு.தரணிகுமார் ஆகியோர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருப்பதற்கான தகுந்த முகாந்திரம் இருந்ததால் அவர்கள் மீது சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/AC/2021 u/s 7(a) & (b) of Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி இன்று 11.01.2021 ஆம் தேதி 15.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன்.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் நகல் கனம் தனிநீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள், விசாரணை நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும், ஒரு நகலை இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி இந்த வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

11/1/2021

(S. சந்திரமௌலி)
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.

2021 09 23 17:05